DEPOSITION OF WITNESS

IN THE COURT OF SPECIAL COURT FOR TRIAL OF CASES REGISTERED UNDER SC/ST(POA)ACT, 1989, RAMANATHAPURAM

**Spl.Sessions Case No. 25/2023**

அ.சா.11

Prosecution witness

| | | | |
|---|---|---|---|
| Name: | மோகனரெங்கன் | Caste: | |
| Father's Name: | சண்முகம் | Calling: | மருத்துவர் |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | 38 |

Solemnly affirmed in accordance with the provisions no of Act X of 1873 of the day of 24.11.2025

( 3,4 எதிரிகள் ஆஜர். 1,2 எதிரிகள் ஆஜர்படுத்தப்படவில்லை. அவர்களது வழக்கறிஞர் ஆஜர். )

**முதன்மை விசாரணை**

நான் தற்போது மதுரை நகர அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் உதவி மருத்துவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 07.08.2020ம் தேதி மாலை 7.20மணியளவில் கமுதி அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணியில் இருந்தபோது கமுதி கே. பாப்பாங்குளத்தை சேர்ந்த கருப்பணன் மகன் பூமிநாதன், வயது 65/2020 என்பவர் அவரது மருமகன் ராஜசேகரனால் சிகிச்சைக்கு அழைத்து வரப்பட்டார். அவர் தன்னை தெரிந்த நான்கு நபர்களுடன் தெரியாத நபர்கள் அன்றைய தினம் மாலை 6.45மணியளவில் கே. பாப்பாங்குளம் கிராமத்தில் உள்ள சின்னஓடை அருகில் வைத்து கூர்மையான ஆயுதங்களால் தாக்கப்பட்டதாக கூறினார். அவரை பரிசோதிக்கையில் வலது முன்கையில் 7x2x2 cm அளவில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது. வேறு காயங்கள் எதுவும் இல்லை. அவருக்கு முதலுதவி சிகிச்சை வழங்கி மேல்சிகிச்சைக்காக

அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். மேற்படி பூமிநாதன் அருப்புக்கோட்டையில் சிகிச்சை பெற்று அங்கிருந்து மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை மற்றும் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் வழங்கப்பட்ட சிகிச்சை ஆவணங்களின் அடிப்படையில் நான் மேற்படி பூமிநாதனுக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என சான்று வழங்கினேன். நான் வழங்கிய விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று **அ.சா.ஆ.6**. இதுசம்பந்தமாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

மேற்படி பூமிநாதன் கமுதி அரசு மருத்துவமனையில் எத்தனை மணிக்கு சிகிச்சைக்கு வந்தார் என்றால் மாலை 7.20. மாலை 7.20 மணியிலிருந்து எவ்வளவு நேரம் கமுதி அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்றால் ஞாபகமில்லை. ஒரு நபருக்கு சிகிச்சை வழங்கி மேல்சிகிச்சைக்காக பரிந்துரைக்கும்போது அந்த நபர் எவ்வளவு நேரம் சிகிச்சையில் இருந்தார் என்பது மருத்துவருக்கு தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல. நான் 07.08.2020 ம் தேதியில் சிகிச்சை அளிக்கவில்லை என்பதால்தான் நேரத்தை சரியாக குறிப்பிட முடியவில்லை என்றால் சரியல்ல. விபத்து பதிவேட்டில் ராஜசேகரன் என்பவர் சிகிச்சைக்கு அழைத்து வந்ததாக மட்டுமே குறிப்பிட்டுள்ளேன் என்றும் அவர் எந்த வாகனத்தில் வந்தார் என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அடையாளம் தெரிந்த நான்கு நபர்களின் பெயர்களை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எந்த தேதியில் நான் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை மருத்துவர் கொடுத்த சிகிச்சை ஆவணங்களின்

அடிப்படையில் கொடுங்காயம் என எந்த தேதியில் கருத்து தெரிவித்தேன் என்றால் ஞாபகமில்லை. அருவாள், வாள் போன்ற ஆயுதங்களால் வெட்டும்போது காயம் சிதைந்த காயம் ஏற்படாமல் வெட்டு காயம் தான் ஏற்படும் என்றால் சரியல்ல. நான் காயத்தை சரியாக பார்த்து பதிவு செய்யவில்லை என்பதால்தான் என்னால் அதுகுறித்து கூற இயலவில்லை என்றால் சரியல்ல.

Sd/-C. Mohanram
Sessions Judge,
Special Court for Trial of Cases Registered
under SC/ST(POA) Act,
Ramanathapuram.(FAC)